# பாரதி மகளிர் கல்லூரி(தன்னாட்சி), வடசென்னை – 108.

## பட்டமேற்பு விழா அறிக்கை – (2017-18)

## 22.02.2020

**'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'**

என்று பல்லாண்டுகளுக்கு முன்பே பாடியுள்ளார் நம் தேசியக் கவிஞர் பாரதியார். அக்கவிஞனின் பெயரிலேயே விளங்கும் எம் பாரதி மகளிர் கல்லூரி,

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஒரு பிறவியில் ஒருவன் கற்றாலும் ஏழு பிறவியிலும் தொடர்ந்து பயன் தரும் பெருமைக்குரிய கல்விச்செல்வத்தை மாணவிகளின் வளமான வாழ்விற்கும் சீர்மிகு முன்னேற்றத்திற்கும் பயன்படும் வகையில் கடந்த 54 ஆண்டுகளாக சிறப்புடன் வழங்கி வருகிறது.

1998ஆம் ஆண்டில் தன்னாட்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பின் நடைபெறும் 18வது பட்டமேற்பு விழாவில் 2018-ம் ஆண்டில் தேர்ச்சிப் பெற்ற மாணவிகளின் தேர்ச்சி அறிக்கையை சிறப்பு விருந்தினர் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். எம் கல்லூரியில், முதல் சுழற்சியில் 13 இளநிலைப் பாடப்பிரிவுகளும், 13 முதுநிலை பாடப்பிரிவுகளும், 5 ஆய்வியல் மற்றும் 4 முனைவர் பட்ட பாடப்பிரிவுகளும், இரண்டாம் சுழற்சியில் 5 இளநிலை பாடப்பிரிவுகளும் திறமையான ஆசிரியர்களால், செம்மையாக நடத்தப்பட்டு வருகின்றன. பல பாடப்பிரிவுகளில் ஆங்கில வழிக்கல்வியோடு தமிழ்வழிக்கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 2018-ல் நடைபெற்ற தேர்வுகளில் எம் மாணவியர் பெற்ற தேர்ச்சி விபரம்.

### இளநிலைப் பட்ட வகுப்புகள்:

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 1187 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 951 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 80% |

### முதுநிலை பட்ட வகுப்புகள்

| | | |
|---|---|---|
| தேர்வு எழுதியவர்கள் | - | 202 |
| தேர்ச்சி பெற்றவர்கள் | - | 177 |
| தேர்ச்சி விழுக்காடு | - | 88% |

இளநிலை வகுப்புகளில், பகுதி-I –ல் – தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளும், பகுதி II-ல் ஆங்கில மொழியும் கற்றுத் தரப்படுகிறது.

## இளநிலை பாடப்பிரிவில் பகுதி Iல் தேர்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 90 விழுக்காடு |
| தெலுங்கு | - | 100 விழுக்காடு |
| ஹிந்தி | - | 100 விழுக்காடு |

## இளநிலை பாடப்பிரிவில் பகுதி II –ல் தேர்ச்சி விபரம்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | - | 81 விழுக்காடு |

## இளநிலைப் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:
## இளங்கலை பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | 81 விழுக்காடு |
| ஆங்கிலம் | - | 76 விழுக்காடு |
| வரலாற்றியல் | - | 43 விழுக்காடு |
| தமிழ் | - | 72 விழுக்காடு |
| வணிகவியல் | - | 95 விழுக்காடு |

## இளம் அறிவியல் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

| | | |
|---|---|---|
| உயிர் வேதியியல் | - | 86 விழுக்காடு |
| தாவரவியல் | - | 84 விழுக்காடு |
| வேதியியல் | - | 90 விழுக்காடு |
| கணினியியல் | - | 92 விழுக்காடு |
| புவியியல் | - | 60 விழுக்காடு |
| கணிதவியல் | - | 78 விழுக்காடு |
| இயற்பியல் | - | 92 விழுக்காடு |
| உயர் விலங்கியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் | - | 82 விழுக்காடு |

## முதுநிலைப் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி விபரம்:

## முதுநிலை கலையியல் பாடப்பிரிவுகள்:

| | | | |
|---|---|---|---|
| வணிகப் பொருளியல் | - | 94 | விழுக்காடு |
| ஆங்கிலம் | - | 94 | விழுக்காடு |
| வரலாற்றியல் | - | 71 | விழுக்காடு |
| தமிழியல் | - | 79 | விழுக்காடு |
| வணிகவியல் | - | 100 | விழுக்காடு |

## முதுநிலை அறிவியல் பாடப்பிரிவுகள்:

| | | | |
|---|---|---|---|
| உயிர் வேதியியல் | - | 100 | விழுக்காடு |
| தாவரவியல் | - | 100 | விழுக்காடு |
| வேதியியல் | - | 100 | விழுக்காடு |
| கணினி அறிவியல் | - | 93 | விழுக்காடு |
| பயன்பாட்டு புவியியல் | - | 80 | விழுக்காடு |
| கணிதவியல் | - | 82 | விழுக்காடு |
| இயற்பியல் | - | 60 | விழுக்காடு |
| விலங்கியல் | - | 92 | விழுக்காடு |

உரிய நேரத்தில் பட்டங்களை வழங்கி, இப்பட்டமேற்பு விழா இனிது நடைபெற காரணமாய் இருந்த பெருமை சென்னைப் பல்கலைக் கழகத்தையே சாரும்.

**‘கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு’** என்பதுணர்ந்து அடக்கத்துடன் மாணவியராகிய நீங்கள் மேன்மேலும் கல்வி கற்று இன்று போல் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எம் கல்லூரி ஆசிரியர்கள் அனைவர் சார்பிலும் உறுதுணையாய் இருந்த பெற்றோர்கள் சார்பிலும் நல்லாசிகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!

**************